செ.வெ.எண்: 40 நாள்: 22.01.2018

**<u>பத்திரிக்கை செய்தி</u>**

**<u>புதுக்கோட்டை மாவட்டம்</u>**

# ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான வார்டு மறுவரையறை குறித்த ஆட்சேபணை மற்றும் கருத்துக்கள் மீதான மண்டல அளவிலான கூட்டத்தில் பங்கேற்று மனுதாரர்கள் கருத்தினைத் தெரிவித்தல்

. . . . . . . . . .

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான வார்டு வரைவு மறுவரையறை 27.12.2017 அன்று வெளியிடப்பட்டது. வரைவு மறுவரையறையின் மீதான ஆட்சேபணைகள் மற்றும் கருத்துக்கள் பொதுமக்கள் மற்றும் அரசியல் கட்சிகளிடமிருந்து 12.01.2018 வரை ஆட்சேபணைகள் மற்றும் கருத்துக்கள் பெறப்பட்டது.

வரைவு மறுவரையறை மீது கருத்துக்கள் மற்றும் ஆட்சேபணைகள் தெரிவித்த மனுதாரர்கள் நேரடியாக ஆஜராகி தங்களது கருத்துக்களைத் தெரிவிக்க ஏதுவாக மாவட்ட அளவிலான முதன்மைக் கூட்டம் 25.01.2018 அன்று புதுக்கோட்டை மாவட்ட மாவட்ட ஆட்சியரக கூட்ட அரங்கில் 3.00 மணியளவில் நடைபெற உள்ளது.

மண்டல அளவிலான மறுவரையறை ஆணையத்தின் கருத்துக் கேட்புக் கூட்டம் **29.01.2018 அன்று திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரக கூட்ட அரங்கில்** மதியம் நடைபெற உள்ளது.

மேற்படி கருத்துக் கேட்பு கூட்டத்தில் 12.01.2018 வரை மனு வழங்கியவர்கள் மட்டும் நேரில் ஆஜராகி தங்களது கருத்துக்களை தெரிவிக்கலாம் ( மனுதாரர்கள் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு வரும்பொழுது தங்களுக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையுடன் வரத் தெரிவிக்கப்படுகிறது)

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**